தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# வள்ளலார் பாடல்களும் ந.சுப்புரெட்டியாரின் கருத்தாக்கமும்

**முனைவர் லா.சார்லஸ்,** உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-02

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய அறிவியல் உலகம் கலை, கலாச்சாரம், பண்பாடு, அரசியல், பொருளியல் என எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு புதிய உலகமாக மாற்றம்பெற்று வருகிறது. மனித வாழ்க்கையின் நடைமுறைகள் பல்வேறு மாற்றங்களைப் பெற்று ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்கி வருவதை அறியலாம். உணவு, உடை, பழக்கவழக்கங்கள், ஆண் பெண் உறவு நிலை, திருமண வாழ்க்கை நிலை, உறவுகளின் ஆழம் என்று பல கண்ணோட்டங்களில் தனிமனித வாழ்க்கை தொடங்கி குடும்பம் சமூகக் கட்டமைப்பு என அனைத்தும் நவீன மயமாய் மாற்றம் பெறுகிறது. மனித வாழ்க்கையை நெறிப்படுத்த பல சமய ஞானிகள் அவதரித்து பல அறவுரைகளைப் பாடி வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறு தோன்றிய சமய அருளாளர்களில் வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றியவர் ஆவார். கல்வியறிவைப் பெறாமலே சான்றோனாய்த் திகழ்ந்து மனித இனத்திற்கு இறைஞானத்தை உணரவும் அறிவுமாக பல கருத்துரைகளைப் பாடிச் சென்றவர். இவரது பாடல்கள் குறித்து பல அறிஞர்கள் விளக்கவுரை எழுதியுள்ள போதும் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் வள்ளலாரின் பாடல்களுக்கு தனித்துவமிக்க கருத்தாக்கம் படைத்திருப்பது சிறப்புடையதாக உள்ளது. இவரது கருத்தாக்கங்கள் வழி வள்ளலாரின் நிலையாமைச் சிந்தனைகள், இறையருளைப் பெறும் வழி,இறைவன் மீது கொண்ட நம்பிக்கை, வழிபாட்டு முறைமைகளை அறிந்து வாழ்வில் கடைபிடிக்கத் தூண்டுவதாய் இருப்பதை அறியமுடிகிறது. எத்தனை நவீன மாற்றங்கள் உலகில் ஏற்பட்டாலும் மனித ஆன்மா இறைவனை நாடியதாகவே உள்ளது. இதற்கு வள்ளலாரின் வழிகாட்டல்கள் துணைபுரிகின்றன என்பதை அறியலாம்.

**கலைச்சொற்கள்**

அருளாளர் - இறைஞானத்தை உணர்ந்தோர்,வினை – செயல் (நல்வினை, தீவினை), மாந்தர் - மக்கள்,சிற்றம்பலவன் - சிவபெருமான்

**முன்னுரை**

திருவருட்பிரகாச வள்ளலார் என்றழைக்கப்படும் இராமலிங்க அடிகள் (1823-1874) பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் அருளாளர். இறைவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டவர். நாமெல்லாம் நமது வினையினைத் தீர்ப்பதற்காக இவ்வுலகில் பிறக்கிறோம். அவர் அப்படிப் பிறந்தவர் அல்லர் என்பதனை அவர் பாடிய ஆறாம் திருமுறையில் கூறுகிறார். இறைவனால் அனுப்பப்பட்டு அவதரித்தவர் என்ற காரணத்தினால்தான், யாரிடமும் கல்வி கற்காமல், பள்ளிக்குச் செல்லாமல், ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோதே புராணப் பிரசங்கம் செய்துள்ளார். தெய்வப் பிறவியாக இவர் வளர்ந்து ஐம்பது ஆண்டுகாலம் வாழ்ந்து, பல அற்புதங்களை எல்லாம் நிகழ்த்தி, ஆறாயிரம் தெய்வீகப் பாடல்களை இயற்றி, பல புதிய தத்துவங்களை இவ்வுலகுக்கு அறிவுறுத்தி, இறுதியாக வடலூரை அடுத்த மேட்டுக் குப்பம் என்னுமிடத்தில் அருட்பெருஞ்ஜோதியாக இறைவனுடன் கலந்தார். உடல் மண்ணுக்கோ, நெருப்புக்கோ தரப்படாமல் மாபெரும் அற்புதம் புரிந்தவர்.

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் தன் வாழ்வின் நடுப்பகுதியில் சைவத் திருமுறைகள் பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் பற்றியும் சில விளக்க நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். தன் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் பிற்கால அருளாசிரியர்கள் பற்றி எழுதி வெளியிடும் பேறு இருந்தமையால் தாயுமானவர் பற்றி எழுதவும் திருவருள் கூடியது. தொடர்ந்து ‘இராமலிங்க அடிகள்’ பற்றி எழுதவும் இறையருள் கிட்டியதாகக் குறிப்பிடுகின்றார். சுப்புரெட்டியார் இராமலிங்க அடிகளாரின் பாடல்களில் அதிகமாக ஈடுபட்டுப் பாடி அநுபவித்த பாடல்களில் சிலவற்றைத் திருமுறைகள் தோறும் தேர்ந்தெடுத்த தொகுப்பும் பதிகந்தோறும் அவரது குறிப்பும் கொண்டவையாக அமைந்துள்ளன. எனவே இராமலிங்க அடிகளின் பாடல்களுக்கு சுப்புரெட்டியாரின் கருத்தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**உருவகத்தின் வழியிலான கருத்தாக்கம்**

‘குடும்ப கோரம்’ என்ற பாடல், சைவ சித்தாந்தக் கருத்துகள் நிரம்பிய உருவகமாகப் பாடியுள்ளார். அதன் சுருக்கமாக,

என் பெயர் 'ஏழை'. எனது முதல் மனைவி 'ஆணவம்'. அவளது மகன் 'அஞ்ஞாமை'. இரண்டாவது மனைவி 'மாயை'. இவள் பெற்ற பிள்ளைகள் நால்வர். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பது அவர்கள் பெயர். மூன்றாவது மனைவி 'காமியம்'. அவளுக்கு மூன்று பிள்ளைகள். அவர்கள் பெயர் சத்துவம், இராசசம், தாமசம் என்பது. இந்த மூன்று மனைவிகளோடும், எட்டுப் பிள்ளைகளோடும் ஏழையாகிய நான், ஒன்பது ஓட்டைகள் உள்ள ஒரு வாடகை வீட்டில் வாழ்கிறேன். இந்த வீட்டின் உரிமையாளர்கள் மூவர். வாதம், பித்தம், கபம் என்ற பெயர் கொண்ட அவர்களுக்கு நான் தினந்தோறும் மூன்றுமுறை வாடகை கொடுக்க வேண்டும். சற்றே தவறினால் அவர்கள் துன்புறுத்துவர் என்று சைவ சமய நெறிகளைக் கூறும் இராமலிங்கரது பாடலுக்கு மிக எளிதானக் கருத்தாக்கம் செய்திருப்பதைக் காணமுடிகின்றது.

**ஆணையிட்டு அருள் கூறல்**

அம்பலத்துள் ஆடுகின்ற சிவபெருமானே எல்லாம் வல்லான் தன்னை ஏத்தின் எல்லாம் செயல்கூடும் என்று தன்மேல் ஆணையிட்டு அருளியுள்ளார்.

"எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே
எல்லாம்வல் லான்தனையே ஏத்து".

என்று அடிகள் ஆணையிட்டுக் கூறிய இக்குறள் வெண்பா அடிகளது திருவாயிற் பிறந்தது முதல் இன்றுவரை சன்மார்க்கிகளால் மந்திர மொழியாகப் பெரிதும் பயிலப் பெற்று வருகிறது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப".

என்பது தொல்காப்பியம். அடிகள் நிறைமொழி மாந்தர். அவர்களது ஆணையிற்கிளந்தது இம்மறைமொழி. ஆகவே, இது மந்திரம். இவ்வாறு ஆணையிட்டுக் கூறும் வழக்கம் அடிகளிடத்துப் பெருவழக்காகக் காணப் பெறுகின்றது. இது ஞானசம்பந்தப் பெருமானிடமிருந்து அடிகட்கு அமைந்திருத்தல் வேண்டும் என்கிறார் சுப்புரெட்டியார். இதேபோல் நான்கு இடங்களில் சம்பந்தர் 'ஆணைநமதே' என ஆணையிட்டுரைக்கின்ற பாடல்கள் அமைந்திருப்பதையும் காணமுடிகின்றது.

"ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஆணைஉன்மேல் ஐயா
அரைக்கணமும் நினைப்பிரிந்தே இனித்தரிக்க மாட்டேன்
கோணைநிலத் தவர்பேசக் கேட்பதுபோல் இன்னும்
குறும்புமொழி செவிகள்உறக் கொண்டிடவும் மாட்டேன்
ஊணைஉறக் கத்தையும்நான் விடுகின்றேன் நீதான்
உவந்துவராய் எனில்என்றன் உயிரையும்விட் டிடுவேன்
மாணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ எனது
மனம்அறிவாய் இனம்உனக்கு வகுத்துரைப்ப தென்னே".

என்று ஆறாம் திருமுறையில்,'பிரியேன் என்றல்' பகுதியில் அடிகள் இறைவன்மீது ஆணையிட்டு விண்ணப்பித்ததைக் குறிப்பிடுகின்றார்.

**புன்மை நினைந்திரங்கல்**

இப்பதிகம் பெண்களை இழிவுபடுத்திப் பேசுவதாக அமைகின்றது. பாடல்கள் சிறப்பிற்குரியது என்றாலும் பெண் சமூகத்தை இழிவபடுத்திப் பேசும் பாங்கு மிக்க வருத்தத்தைத் தருகின்றது. அடிகளாரின் வாழ்க்கையில் எந்தப் பெண்ணும் அவரை மயக்கியதில்லை. அடிகளாரும் சிற்றின்பத்தை வெறுத்தொதுக்கியவர். இவரது பாடலில்,

"மஞ்சட் பூச்சின் மினுக்கில்இ ளைஞர்கள்
மயங்க வேசெயும் வாள்விழி மாதர்பால்
கெஞ்சிக் கொஞ்சி நிறைஅழிந் துன்அருட்
கிச்சை நீத்துக் கிடந்தனன் ஆயினேன்
மஞ்சுற் றோங்கும் பொழில்தணி காசல
வள்ளல் என்வினை மாற்றுதல் நீதியே
தஞ்சத் தால்வந் தடைந்திடும் அன்பர்கள்
தம்மைக் காக்கும் தனிஅருட் குன்றமே"

எனப் பாடுகின்றார். இதற்கு சுப்புரெட்டியார் கருத்தாக்கமாக, பெண்களுக்கு அழகு இறைவனால் நல்கப்பட்டது. வமிசம் தழைப்பதற்காக ஆணைக் கவர்வதற்கு இந்த ஏற்பாடு. இதனை ஆழ்ந்து நோக்கினால் பெண்ணினத்தைக் குறைத்துப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படாது. பெரும்பாலான ஆண் புலவர்கள்தாம் இங்ஙனம் பாடுகின்றனர். பெண்பாற் புலவர்கள் ஆண்களின் அட்டூழியத்தைப் பாடத் தொடங்கிவிட்டார்களானால், ஆணுலகம் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது. இறைவனது படைப்பிலேயே பெண்ணுக்கு ஆசை கட்டுப்பாட்டில் இருக்குமாறு அமைந்துள்ளது. மயங்கிச் செயலில் ஈடுபட்டால் விளைவு உடனே செயலைப் பறையறைவிக்கும். பெண்ணினத்தை இழிவுபடுத்திப் பேசும் அடிகளாரின் போக்கு சிந்திக்கும் அறிஞர்கட்கு உகந்ததாக இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும் என்கிறார்.

**திருமுல்லைவாயில் பற்றிய குறிப்பு**

இத்தலம் பற்றி ஆசிரியர் கூறும்போது, பழங்காலத்தில் இத்தலம் முல்லைக் காடாக இருந்தது. தொண்டை நாட்டைச் சேர்ந்த மன்னன் ஒருவன் இவ்வழியாக ஏகினபோது அவனது யானையின் காலில் முல்லைக் கொடிகள் சிக்கி யானை நின்றது. மன்னன் இறங்கி, கொடிகளை வெட்டினான். வெட்டுண்ட இடத்திலிருந்து இரத்தம் பீறிட்டது. அகழ்ந்து பார்க்கையில் சிவலிங்கம் ஒன்று தென்பட்டது. வெட்டுப்பட்ட லிங்கத்திலிருந்து குருதி வழிந்தது. மன்னன் காடு வெட்டி நாடாக்கிக் கோயில் கட்டினான். இதனால் இத்தலத்து இறைவனுக்கு 'வெட்டுத் தாங்கி ஈசுவரர்' என்ற காரணத் திருநாமமும் ஏற்பட்டது. திருக்கோயிலின் அர்த்த மண்டபத் தூண்கள் இரண்டும்

எருக்க மரத்தாலானவை. இது தலத்தின் சிறப்பாகும். இத்தலம் குறித்து அடிகள் பாடும்போது,

“தாயின் மேவிய தற்பர மேமுல்லை
வாயின் மேவிய மாமணி யேஉன்தன்
கோயின் மேவிநின் கோமலர்த் தாள்தொழா
தேயின் மேவி இருந்தனன் என்னையே”

என்று பாடி இப்பதிகத்தில் திருவிண்ணப்பம் செய்திருப்பதை ஆசிரியர் உணர்த்துகின்றார்.

**காதல் விண்ணப்பம்**

அகத்துறை போல் காட்சி அளிக்கும் இப்பதிகம் அகத்துறையின்பாற் பட்டதன்று. இங்கு காதல் என்பது ‘பக்தி’ என்னும் பொருளில் அமைந்துள்ளது. இது திருவொற்றியூரில் வீற்றிருக்கும் சிவபெருமானை நோக்கி விண்ணப்பிப்பதாக அமைகின்றது. எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்த யாப்பில் அமைந்துள்ளது.

“வஞ்சக வினைக்கோர் கொள்கலம் அனைய
மனத்தினேன் அனைத்தினும் கொடியேன்
தஞ்சம்என் றடைந்தே நின்திருக் கோயில்
சந்நிதி முன்னர்நிற் கின்றேன்
எஞ்சலில் அடங்காப் பாவிஎன் றெனைநீ
இகழ்ந்திடில் என்செய்வேன் சிவனே
கஞ்சன்மால் புகழும் ஒற்றியங் கரும்பே
கதிதரும் கருணையங் கடலே”

என அடிகளின் பக்திப் பெருக்கு இறைவன் மீது கரை புரண்டோடுகின்றதை இப்பதிகத்தில் காணமுடிகின்றது.

**நிலையாமைச் சிந்தனைகள்**

மனித மனம் மண்ணின்மீது கொண்டுள்ள ஆசை சொல்லும் தரமன்று. இதனை அடிகள் பாடும்போது,

“மண்ணாசை கொண்டனைநீ மண்ணாளும் மன்னரெலாம்
மண்ணால் அழிதல் மதித்திலையே – எண்ணாது
மண்கொண்டார் மாண்டார்தம் மாய்ந்தவுடல் வைக்கவயல்
மண்கொண்டார் தம்இருப்பில், வைத்திலரே – திண்கொண்ட
விண்ணேகுங் கால்அங்கு வேண்டுமென ஈண்டுபிடி
மண்ணேனும் கொண்டேக வல்லாரோ”– *(418 – 420)*

என்று மனத்தை நோக்கிப் பேசுகின்றார். பூமித்தாய் தான் மறைத்து வைத்திருக்கும் நிலக்கரி, எண்ணெய் வளங்கள் முதலிய பல செல்வங்களை மன்பதைக்கு நல்கி உதவுகின்றாள். கையூட்டு வாங்குவோர், கறுப்புச் சந்தைக்காரர்கள், அரசியல் எத்தர்கள் தாம் தகாத வழியில் ஈட்டிய செல்வத்தை மண் வாங்கி மறைக்கின்றனர். இது பற்றிய அன்றாட நீதிமன்ற

வழக்குகள் நமக்குப் பறைசாற்றுகின்றன. ஐம்பெரும் பூதங்களில் மண் ஒன்றே திண்ணியது. மறைப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்தது. மண்ணால் தன் உடல் அழிந்து போவதை உணராத மனிதன் இவ்வாறெல்லாம் செயல்படுவதை உணர்த்துகின்றார். மேலும் பல பாடல்களில் நிலையாமை குறித்து நம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்தி வாழ வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளார்.

**தொகுப்புரை**

தில்லை சிற்றம்பலவன் திருவருள் இவருக்கு நிறைய இருந்தமையால் ஆடலரனைப் பற்றிய பாடல்கள் இவர்தம் அருளிச்செயல்களில் அதிகமாகவே காணப்படுகின்றன. திருமந்திரப் பயிற்சி இவர்தம் உள்ளொளியைப் பெருக்கி இருக்க வேண்டும். இறையருள்தான் இவரைச் சமரச சுத்த சன்மார்க்கத்தைக் காணவைத்தது. எத்தனை நவீன மாற்றங்கள் உலகில் ஏற்பட்டாலும் மனித ஆன்மா இறைவனையே நாடுவதாக உள்ளது. இதற்கு வள்ளலாரின் சிந்தனைகளும் செயல்பாடுகளும் துணைபுரிகின்றன.

இத்தகு சிறப்புமிக்கப் பாடல்களைப் பாடிய இராமலிங்க அடிகளாரது வாழ்க்கை வரலாற்றினையும், அவர்தம் பாடல்களையும் முழுமையாக தம் உள்ளத்தில் ஏற்றி, தமிழ்மொழி வளர்ச்சிக்கு உந்துசக்தியாகத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர் பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் ஆவார். தம் வாழ்நாளின் இறுதிக் காலப்பகுதியில் எழுதப்பெற்ற இந்நூல் இராமலிங்க அடிகளாரின் பக்திநெறியை முழுமையாக அறிய உதவுவனவாக இருப்பதை அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. இராமலிங்க அடிகள், ந.சுப்புரெட்டியார், கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை – 17.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், பா.176